செ.வெ.எண்:14 நாள்: 08.10.2020

**கரூர் மாவட்டம்**

**சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சைப் மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட நபர்களிடம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் நேரில் நலம் விசாரித்தார்**

அதன் விபரம் வருமாறு:

கரூர் நகரப்பகுதியில் அமைந்துள்ள பழைய அரசு மருத்துவமனையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சை மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்.இஆப., அவர்கள் இன்று (08.10.2020) நேரில் பார்வையிட்டு ஆய்வுசெய்தார்.

உலகையே அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கொரோனா தொற்று பரவலைத் தடுக்கும் வகையில் கரூர் மாவட்டத்தில் போர்க்கால அடிப்படையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. இந்நிலையில், கொரோனா தொற்றுக்கான அறிகுறிகளாக கருதப்படும் சளி, காய்ச்சல், இருமல், மூச்சுத்திணறல் உள்ளிட்ட அறிகுறிகள் ஏதும் இல்லாமல், தொற்று பாதிப்பு உள்ளவர்களுக்கு சித்த மருத்துவ முறைப்படி சிகிச்சை அளிக்க ஏதுவாக கரூர் நகரத்தில் அமைந்துள்ள, அரசு மருத்துவமனையில் (பழைய அரசு தலைமை மருத்துவமனை) “சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சை மையம்” அமைக்கப்பட்டு உள்ளது.

தொற்றுக்கான அறிகுறிகளுடனும், உடல்நிலை அதிக பாதிப்புடனும் காணப்படும் நபர்களுக்கு அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் ஏற்கனவே சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றது. தொற்றுக்கான அறிகுறியே இல்லாமல் அல்லது குறைந்த அளவிலான பாதிப்புகளுடன் தொற்று உள்ள நபர்களுக்கு சித்த மருத்துவ சிகிச்சை மையத்தில் சிறப்பான சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

மூச்சுப்பயிற்சி, யோகா பயிற்சி உள்ளிட்ட பயிற்சிகள் சித்த மருத்துவ அலுவலர்களால் வழங்கப்பட்டு வருகிறது. உளவியல் நிபுணர்களால் மனதிற்கு ஆறுதல் மற்றும் தன்னம்பிக்கை அளிக்கும் வகையிலான தகவல்கள் ஒவ்வொருவருக்கும் தெரிவிக்கப்படுகிறது. சிகிச்சை பெற்று வருகின்றவர்களின் மனஅழுத்தத்தை போக்கவும், பொழுதுபோக்கிற்காகவும் மெல்லிய இசை, நாளிதழ், வார மற்றும் மாத இதழ் வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் சதுரங்கம், கேரம் உள்ளிட்ட விளையாட்டு அம்சங்களும் வழங்கப்பட்டு உள்ளது. பெண்களின் கோரிக்கை ஏற்று பல்லாங்குழி, பரமபத விளையாட்டு வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. புத்தகம் படிக்க விரும்பும் நபர்களுக்காக சிறுநூலகம் ஒன்றும் அமைத்துதரப்பட்டுள்ளது.

இந்நிலையில் சிறப்பு சித்த மருத்துவ சிகிச்சை மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது இங்கு அனுமதிக்கப்படும் பொதுமக்களுக்கு வேறு ஏதேனும் வசதிகள் தேவைப்படுகின்றதா என்பது குறித்தும், போதிய மருந்துகள் இருப்பில் உள்ளதா என்பது குறித்தும் சித்த மருத்துவர்களிடம் கேட்டறிந்தார். மருத்துவமனையில் முதல்தளத்தில் நின்றுகொண்டிருந்த கொரோனா தொற்றாளர்களிடம் உடல் நலம் குறித்தும், ஏற்படுத்தப்பட்டுள்ள வசதிகள் போதுமானதாக உள்ளதா என்பது குறித்தும் கேட்டறிந்தார்.

அப்போது, “உங்களுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்துகொடுக்கப்பட்டுள்ளது. உங்களின் பொழுதுபோக்கிற்காக சதுரங்கம், கேரம், பரமபதம், பல்லங்குழி உள்ளிட்ட விளையாட் உபரகணங்களும், தினசரி செய்தித்தாள்களும் வழங்கப்பட்டுள்ளது. மருத்துவர்களும், செவிலியர்களும், தூய்மைப்பணியாளர்களும் உங்களுக்காக 24 மணி நேரமும் கண்துஞ்சாது பணியாற்றி வருகின்றனர். எனவே, நீங்கள் மன உறுதியுடன் இருந்து விரைவில் பூரண குணமடைந்து வீடுதிரும்ப வாழ்த்துகின்றேன்” என்று மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இன்றை நிலவரப்படி, சித்த மருத்துவ சிகிச்சை மையத்தில் இதுவரை 1,035 நபர்கள் அனுமதிக்கப்பட்டு 911 நபர்கள் பூரண நலம்பெற்று வீடுதிரும்பியுள்ளனர். தற்போது 172 படுக்கை வசதிகள் தயார் நிலையில் இருக்கின்றது. தேவைப்படும் பட்சத்தில் கூடுதலான படுக்கைவசதிகளை ஏற்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது 34 ஆண்களும், 21 பெண்களும் என மொத்தம் 55 நபர்கள் சித்தமருத்துவ சிகிச்சை மையத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வின்போது, நகராட்சி ஆணையர் திருமதி.சுதா, சித்த மருத்துவ அலுவலர்கள் மரு.பர்வேஷ், மரு.கவிதா, மரு.மனோகரன், கரூர் வட்டாட்சியர் திரு.செந்தில் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.